அரசாங்க நிருவாகச் சுற்று நிருபம் இல. 48/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு 7
1989 ஒக்டோபர் 6 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

1979 இன் 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் அவசரகால சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களை/ஊழியர்களை மீண்டும் பதவியில் அமர்த்துதல்.

தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய (ஆரம்ப விசாரணையின் காண்புகளின் அடிப்படையில்) நடாத்தப் பெற்ற முறைசார் விசாரணை ஒன்றுக்கு அமைய, பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களை, கூட்டுத்தாபன ஊழியர்களை அவர்களது பதவிகளில் மீண்டும் அமர்த்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

..2

3. மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள், வீட்டுத் தேவைப் பொருட்கள் மற்றும் பிற சொந்த உடைமைகள் போன்ற சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்திற்காக நட்டஈட்டை/நிவாரணத்தைப் பெறுவதற்கானவொரு விண்ணப்பத்துடன் அப்பிரதேசத்தின் பகுதி உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்ற சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும். மோட்டார் வாகனங்களின் விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதுவ மொன்றின் சொந்தக்காரரிடமிருந்து சேதம் ஏற்பட்ட நேரத்தில் அவ்வாகனத்தின் பெறுமதியைக் குறித்துரைக்கும் சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. மேலே குறிப்பிட்ட சான்றிதழ்களின் அடிப்படையில் நட்டஈடாக/நிவாரண மாகக் கொடுக்கப்பட வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

5. நட்டஈட்டிற்காக/நிவாரணத்திற்கானவொரு விண்ணப்பம் அமைச்சின் உத்தி யோகத்தர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரிலும் அல்லது இராஜாங்க அமைச்சரின் செயலாளரிலும் அல்லது செயலாளரிலும் நியமிக்கப்பட்ட வொரு சிரேட்ட உத்தியோகத்தரிலும் மாகாண சபை உத்தியோகத்தர்களின் தொடர் பில் பிரதான செயலாளரிலும் அரசாங்கத் திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத் தர்களின் தொடர்பில் திணைக்களத் தலைவரிலும் அல்லது அவருடைய பிரதித் தலைவரி லும் அரசாங்க கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் தொடர்பில் தலைவரிலும் அல்லது பொது முகாமையாளரிலும் அதிகாரமளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. இந்நோக்கத்திற்குத் தேவையான நிதியங்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு இராஜாங்க அமைச்சரின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

7. இத்திட்டம் 1987.07.01ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும்.

ஒப்பம்: பி.என்.எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

09.10.1989 ஆந் திகதியிட்ட 49/89 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி வீடு, சொத்துக்கள் ஆகியவற்றுக்கு ஏற் படுத்தப்பட்ட சேதத்திற்கு நட்டஈட்டை/நிவாரணத்தைப் பெறுவதற்கான விண்ணப்பம்

---

1. பாதிக்கப்பட்ட சொத்து
அமைந்துள்ள இடத்தின் முகவரி: -

2. சேதம் ஏற்பட்ட திகதியும் காரணமும்: -

3. ஏற்படுத்தப்பட்ட சேதத்தின் தன்மையும் பெறுமதியும் :-

(அ) வீடு :

1) கூரை
2) சுவர்கள்
3) கதவுகளும் யன்னல்களும்
4) ஏதாவது பிறவிடயங்கள்
5) சொந்தக்காரரா அல்லது வாடகைக் குடியிருப்பாளரா என்பதைக் குறிப்பிடுக.

(விண்ணப்பகாரர் வீட்டின் சொந்தக்காரராகவில்லாதவிடத்து பழுது பார்ப்பதற்கு அதிகாரமளித்து சம்மதமளிக்கும் கடிதமொன்றை வீட்டின் சொந்தக்காரரிடமிருந்து பெற்று இணைக்கவும்.)

(ஆ) மோட்டார் வாகனம் (ஏதாவதிருந்தால்)
1) வாகன இலக்கம் :
2) கொள்வனவு விலை :
3) சேதமேற்பட்ட நேரத்தில் மதிப்பிட்ட பெறுமதி :

(இ) தளவாடங்கள் :
1) கொள்வனவு விலை
2) சேதம் ஏற்பட்ட நேரத்தில் மதிப்பிடப்பட்ட பெறுமதி :

(ஈ) பிற வீட்டுத் தேவைப் பொருட்கள்
1) விடயம்
2) கொள்வனவுத் தேதி
3) கொள்வனவு விலை
4) சேதம் ஏற்பட்ட நேரத்தில் மதிப்பிடப்பட்ட பெறுமதி.

(உ) பிற
1) விடயம்
2) கொள்வனவுத் தேதி
3) கொள்வனவு விலை
4) சேதம் ஏற்பட்ட நேரத்தில் மதிப்பிடப்பட்ட பெறுமதி :

விண்ணப்பகாரரினால் செய்யப்படும் பிரகடனம்

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் சரியானவையெனவும் செம்மையானவையெனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்தி உறுதிப்படுத்துகிறேன் / சத்தியஞ் செய்து உறுதிப்படுத்துகிறேன்.

ஒப்பம் : தேதி :

எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டுள்ளது.
சமாதான நீதவான் :-